## மருதமலை வனப்பகுதியில்

# பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றிய அரசு கலைக்கல்லூரி மாணவர்கள்

கோவை, செப்.22: கோவை அரசு கலைக்கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்ட பிரிவு சார்பில், மருதமலை வனப்பகுதி, கோயிலுக்கு செல்லும் படிக்கட்டு போன்ற பகுதிகளில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றும் பணி நேற்று முன்தினம் நடந்தது.

இந்நிகழ்ச்சியில் அரசு கலைக்கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்ட அலுவலர் மகேந்திரன், பாரதியார் பல்கலைக் கழக நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் ராதாகிருஷ்ணன், சுற்றுச்சூழல் ஆர்வலர் யோகநாதன் ஆகியோர் பங்கேற்று பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றும் பணியை துவக்கி வைத்தனர்.

இதில், அரசு கலைக்கல்லூரியின் நாட்டு நலப்பணி பிரிவை சேர்ந்த 150 மாணவ, மாணவிகள் பங்கேற்று பிளாஸ்டிக் கழிவுகளை அகற்றினர். காலை 9 மணி முதல் மதியம் 1 மணி வரை பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றும் பணி நடந்தது.

இதில் பாலீதின் கவர்கள், தம்ளர்கள் என மொத்தம் 500 கிலோ பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றப்பட்டது.



கோவை அரசு கலைக்கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்ட பிரிவு சார்பில், மருதமலை வனப் பகுதி, கோயிலுக்கு செல்லும் படிக்கட்டு போன்ற பகுதிகளில் உள்ள பிளாஸ்டிக் கழிவுகளை மாணவர்கள் அகற்றினர்.

மேல் மதிப்பெண் பெற்றவர்கள், நான்கரை வருட இளநிலை பிசியோதெரபி மற்றும் மேல்படிப்பாக மாஸ்டர் ஆப் பிசியோதெரபி ஆகிய படிப்புகள் உள்ளன. படிப்பினை முடித்து தனியார் மற்றும் அரசு மருத்துவமனையில் பிசியோதெரபிஸ்ட் பணியில் சேருகின்றனர். குறிப்பிட்ட நேரங்கள் மற்றும் முழுநாட்கள் அடிப்படையில் பணிபுரிகின்றனர்.

தமிழகம் முழுவதும் 32 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் பிசியோதெரபிஸ்ட்களாக உள்ளனர். மருத்துவ கல்லூரி உடன் இணைந்த மருத்துவம

மாலையில்
முரசு
படியுங்கள்

22-9-14
தினகரன்